செ.வெ.எண்:03 நாள்:01.03.2017

# கரூர் மாவட்டம்
# மேல்நிலை பொதுத் தேர்வுகள் – மார்ச்–2017

## பத்திரிக்கை செய்தி

மேல்நிலைப் பொதுத் தேர்வுகள் 02.03.2017 முதல் 31.03.2017 வரையில் தேர்வுக் கால அட்டவணைப்படி நடைபெறவுள்ளது. கரூர் மாவட்டத்தில் உள்ள 104 பள்ளிகளைச் சேர்ந்த 5482 மாணவர்கள், 5990 மாணவிகள் ஆக மொத்தம் 11472 பள்ளி மாணவ, மாணவியர்கள் 34 தேர்வு மையங்களில் தேர்வு எழுதுகின்றனர். மேலும் தனித் தேர்வர்களாக 164 மாணவர்கள், 197 மாணவியர்கள் ஆக மொத்தம் 361 மாணவ, மாணவியர்கள் தேர்வெழுத உள்ளனர்.

02–03–2017 அன்று துவங்க உள்ள மேல்நிலை பொதுத் தேர்வுப் பணிகளுக்காக, வினாத்தாள் கட்டுக் காப்பாளர்கள், முதன்மைக் கண்காணிப்பாளர்கள், கூடுதல் முதன்மைக் கண்காணிப்பாளர்கள், துறை அலுவலர்கள், கூடுதல் துறை அலுவலர்கள், வழித்தட அலுவலர்கள், நிலையான பறக்கும் படை உறுப்பினர்கள், மற்றும் அறைக் கண்காணிப்பாளர்கள் என 850 ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

பொதுத் தேர்வுகளை செம்மையாக நடத்திடவும், தேர்வுகளின்போது முறைகேடுகளை தடுக்கவும், தேர்வு மையங்களை திடீர் பார்வையிடவும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் **மாவட்ட தேர்வுக் குழு** அமைக்கப்பட்டு தேர்வு மையங்கள் தீடீர் பார்வையிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கரூர்.